# தமிழ் உள்ள வரை கலைஞர் எனும் நல்லவரைப் போற்றுவோம்!

**திருவாரூர் கலைஞர் கோட்டத் திறப்பு விழாவில் நடந்த கலைஞர் நூற்றாண்டுக் கவியரங்கில் கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினி பாடிய கவிதை:**



அகத்தியர் கமண்டலத்திலிருந்து
பாய்ந்த நதி காவிரி
காவிரி மண்டலத்திலிருந்து
பாய்ந்த நதி கலைஞர்

அரசாறு பாய்கின்ற திருவாரூர் பூமி
அரசாறுக்கு நீர் வரத்து
கலைஞர் என்னும் சாமி

ஈரோட்டுத் திடலும்
காஞ்சிப் படலும் சங்கமிக்கும்
கடல் கலைஞர்

திருவாரூர் மும்மூர்த்திகளின் தலம்
திராவிட மும்மூர்த்திகள்
பெரியார் அண்ணா கலைஞர்
மூவருக்கும் தன்மான வணக்கம்

மும்மூர்த்தியும் ஒன்றான
செயல்மூர்த்தி தளபதிக்குத்
தங்கை வணக்கம்

தமிழர் பிரதமராக வருவார்

நம்மிடம் இருக்கிறார்
பிரதமர் ஸ்டாலின்
அந்த ஆண்டாள்
கண்ணனுக்குச் சூட்டினாள் பூமாலை

இந்த ஆண்டாள்
அண்ணனுக்குச் சூட்டுகிறாள் பாமாலை

நூற்றாண்டு என்பது
நாள்காட்டியின் நீளமா
கலைஞர் கொள்கையின் நீளம்
தத்துவத்தின் நீளம்
கலைஞரின் நீளம்

கவியரங்கம் என்றால்
கலைஞர் இருப்பார்
கவிஞர்கள் வியந்திருக்கக்
கவிதைகள் படைப்பார்

கரகரத்த குரலில்
உடன்பிறப்பே என அழைப்பார்

அவர் கவிதை நடக்கும் ஒடும்
சிரிக்கும் சிந்தனை விரிக்கும்
எதிரியைக் காயும்
புலிப்பாய்ச்சல் பாயும்

கலைஞர் கவிதைக்கு
வானம் கைதட்டும்
வானவில் கைதட்டும்
பூமி கைதட்டும்
புதுப்பூக்கள் கைதட்டும்
தமிழன்னையே கைதட்டும்
காட்சிகள் விண்முட்டும்

அதோ வருகிறார் கலைஞர்
வெள்ளை வேட்டி அசைந்திருக்க
சுருட்டை முடி நெளிந்திருக்க
கவிக் கரங்கள் குவிந்திருக்க
கருத்த மையும் நிறைந்திருக்க

தியாகேசா வா
எங்கள் தியாகராசா வா
கலைஞர் ஐயா வா
எங்கள் தமிழே வா

வந்துவிட்டார் கலைஞர் கவியரங்கம்
கவியரங்க மேடையெல்லாம் கலைஞர்
மேடை என்றாகும்

தமிழ் உள்ளவரை
கவிதை உள்ளவரை
கலைஞர் எனும் நல்லவரைப்
போற்றுவோம்
கலைஞர் இன்னும்
நூறாண்டு வாழ்க

கலைஞர் கந்தர்வப் பேரழகன்
சுருட்டை முடி ஆணழகன்
முரசொலித்துச் சூரியனை
எழுப்புகின்ற முதல் அழகன்
திராவிடத்தால் ஆரியனை
விரட்டுகின்ற வில் அழகன்
கறுப்பு மை எழுத்தால்
அமுதம் தரும் எழுத்தழகன்
பச்சை மை எழுத்தால்
விடியல் தரும் செயல்அழகன்
எப்போதும் தொண்டர்களை
அரவணைக்கும் தாயழகன்
என் உயிரினும் மேலான
உடன் பிறப்புகளே அழைப்பால்
உயிர் கொடுக்கும்
வாழ்வழகன்
தந்தையழகன்
அவர்தான் தமிழ் அழகன்

ஒரு நூற்றாண்டுக்கு முன்பு
இந்தத் திருவாரூர்

சாலைகள் இல்லை
சோலைகள் இல்லை
வண்டி வாகனம் ஏதுமேயில்லை
நவீனம் இல்லை
நாகரிகம் இல்லை
அரசியல் சேதிகள்
ஏதுமே இல்லை

வேம்பு வெக்கை
ஆட்டுப் புழுக்கை
இதனைத் தவிர வேறேதுமில்லை

கலைஞர் மீது புழுதி படிந்தது
கொள்கையில் புழுதி படியவில்லை
கலைஞர் பாதத்தில் மண் படிந்தது
திராவிடத்தில் மண் படியவில்லை
ஊரில் இருள் படிந்தது
கலைஞர் கனவில்
இருள் படியவில்லை
கலைஞர் மீது சாதியம் படிந்தது
கலைஞர் தன்மானத்தில்
தடுமாற்றம் படியவில்லை

இந்த மண்ணில்தான்
கலைஞர் கருவானார்
கலைஞர் உருவானார்
தமிழ்நாட்டின் திருவானார்



**கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினி**

கலைஞர் பாதத்துக்குத் தெரியும்
தமிழ்நாட்டின் ஒவ்வொரு மண்துகளும்
கலைஞர் சுவாசத்துக்குத் தெரியும்
ஒவ்வொரு குக்கிராமக் காற்றும்
கலைஞர் மனசுக்குத் தெரியும்
ஒவ்வொரு தொண்டனின்
தியாகமும் உழைப்பும்

அண்ணா கண்டது
மாபெரும் தமிழ்க் கனவு
கலைஞர் கண்டது
மாபெரும் தமிழ் நனவு

தமிழ்நாட்டின் டபுள் என்ஜின்
அண்ணா, கலைஞர்

இரட்டைக்குவளை தீண்டாமையை
இல்லாமலாக்கிய பேராண்மை
மனுநீதியை வேரறுத்த

மனித நீதி
சாதியை வேரறுத்த
திராவிடநீதி

நம் டபுள் என்ஜின்
சமநீதி கொடுக்கும்
அவர்கள் டபுள் என்ஜின்
மணிப்பூரை எரிக்கும்
நம் டபுள் என்ஜின்
நீட் ஒதுக்கும்
அவர்கள் டபுள் என்ஜின்
நீட் மூலம் சேரியை நசுக்கும்

மத்தியில் கூட்டாட்சி
மாநிலத்தில் சுயாட்சி
திராவிடக் கொள்கை

மத்தியில காட்டாட்சி
மாநிலத்தில் பேயாட்சி
ஒன்றியக் கொள்கை

அவர்களின் ஆர் எஸ் எஸ்
ராஷ்ட்ரிய ஸ்வயம் சேவக்
சனாதனம் தந்தது

திராவிடத்தின் ஆர் எஸ் எஸ்
Rational
secular
Socialism
கலைஞர் தந்தது

கலைஞர்
தென்றலைத் தீண்டவில்லை
தீயைத் தாண்டினார்

நெருக்கடி வளையங்கள்
நெருப்பு நிலையங்கள்
வசவு வீண் பழிகள்
அவச்சொல் வலிகள்
அதிகாரத் திணிப்பு
ஆட்சிக் கலைப்பு
தேர்தல் தோல்வி
துரோகத்தின் வேள்வி
ஆயிரம் வெளிப்பகை
ஆயிரம் உட்பகை
போராட்டம் போராட்டம்
விடியல் போராட்டமானது
வாழ்க்கை தீமூட்டமானது

காக்கா கூடக் குஞ்சு பொரிக்காத
கந்தக பூமியில்
கலைஞர் காட்டுப்பூ
தானே விதைத்தார்
கலைஞர் சுயம்பு
தானே முளைத்தார்
கலைஞர் சூரியப்பூ
தானே திசையானார்
கலைஞர் நெருப்பு
தானே விசையானார்
கலைஞர் கறுப்பு
தானே வானமானார்
கலைஞர் சிவப்பு
தானே விடியலானார்
நோய்க்கு

மருந்து கொடுத்தார் கலைஞர்
நோயே கொடுக்கிறது ஒன்றியம்
குடிசைக்கு
ஸ்டெதாஸ்கோப்
கொடுத்தார் கலைஞர்
தூக்குக் கயிறு கொடுக்கிறது ஒன்றியம்
அம்பேத்கர் சட்டக் கல்லூரி
கொடுத்தார் கலைஞர்
அரசியல் சாசனத்தை
அடுப்புக் கரியாக்கிக்
கொடுக்கிறது ஒன்றியம்
ரம்ஜானுக்கு விடுமுறை
கொடுத்தார் கலைஞர்
அல்லாஹூ அக்பர் வேண்டாம்
ஜெய்பஜ்ரங்பலி கொடுக்கிறது ஒன்றியம்
வேளாண்மைக் கல்லூரி
கொடுத்தார் கலைஞர்
வேளாண்மையாளருக்குத்
திருவோடு கொடுக்கிறது ஒன்றியம்
நெசவாளருக்கு நிம்மதி
கொடுத்தார் கலைஞர்
நெசவாளருக்குக் கிழிசல்
தருகிறது ஒன்றியம்
பிச்சைக்காரர் மறுவாழ்வு
மையம் கொடுத்தார் கலைஞர்
இந்தியா கையில்
திருவோடு கொடுக்கிறது ஒன்றியம்

அண்ணா மறுமலர்ச்சித்திட்டம்
கொடுத்தார் கலைஞர்
அம்பானி அதானி
பெருவளர்ச்சித் திட்டம்
கொடுக்கிறது ஒன்றியம்
உருது அகாதமி
கொடுத்தார் கலைஞர்
எருது மேய்க்கும் சதியைக்
கொடுக்கிறது ஒன்றியம்
டைடல் பார்க்
கொடுத்தார் கலைஞர்
பக்கோடா விற்கும்
சனாதனம் கொடுக்கிறது ஒன்றியம்

ஒரு ரூபாய்க்கு
ஒரு கிலோ அரிசி
கொடுத்தார் கலைஞர்
எல்லோருக்கும்
வாய்க்கரிசி கொடுக்கிறது ஒன்றியம்

கலைஞர் பேனா
பசிக்குச் சோறு தந்தது
கிழிசலுக்குச் சேலைதந்தது
பள்ளத்துக்கு ஏணி தந்தது
பெண்ணுக்குச் சிறகு தந்தது
குடிசைக்குக் கூரை தந்தது
சனாதனத்துக்குப்
பகுத்தறிவு தந்தது
சாதிக்குச்
சவுக்கடி தந்தது
இந்தியாவின் வல்லரசு
மாநிலம் தமிழ்நாடு
பெருமை தந்தது

வெற்றிவேல் வீரவேல்
எல்லோருக்கும் சொந்தம்
முத்துவேல் கருணாநிதி
திராவிடத்தின் சொந்தம்
எதிர்காலப் பிரதமர்
முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்
தமிழினத்தின் சொந்தம்

நூற்றாண்டு வாழ்க
நூறாண்டு பாராண்டு வாழ்க!

---

## திண்டுக்கல் மாவட்டம் - செட்டியபட்டி ஊராட்சி ராஜீவ்காந்தி நகரில் - முதலமைச்சர்

# சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் மூலம் ரூ.18.95லட்சம் மதிப்பில் புதிய தார்ச்சாலை அமைக்கும் பணி!

## ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி துவக்கி வைத்தார்!

ஆத்தூர், ஜுன் 26-

செட்டியபட்டி ஊராட்சி ராஜீவ்காந்தி நகரில் தமிழக முதலமைச்சர் சாலைகள் மேம்பாட்டு திட்டம் மூலம் ரூ.18.95லட்சம் மதிப்பில் புதிய தார்சாலை அமைக்கும் பணியினை ஊரகவளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி துவக்கி வைத்தார். திராவிட மாடல் ஆட்சி நாயகன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சியில் கிராமங்கள் நகரங்களுக்கு இணையாக வளர்ச்சி பெருகிறது என்று அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதமாக கூறினார்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியம் செட்டியபட்டி ஊராட்சிக்கு உட்பட்ட ராஜீவ்காந்தி நகர் பொதுமக்கள் தங்கள் பகுதிக்கு புதிய தார்ச்சாலை வசதி வேண்டுமென ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமியிடம் மனு கொடுத்தனர்.

பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று உடனடியாக ராஜீவ்காந்திநகர் பகுதிக்கு தமிழக முதலமைச்சர் சாலைகள் மேம்பாட்டு திட்டம் மூலம் ரூ.18.95லட்சம் மதிப்பில் புதிய தார்ச்சாலை அமைக்க ஊரகவளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உத்தரவிட்டார்.

அதன்படி அதற்கான அடிக்கல் நாட்டு விழா புதன்கிழமை மதியம் 1மணியளவில் ராஜீவ்காந்தி நகரில் நடைபெற்றது. விழாவிற்கு ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன் தலைமை தாங்கினார். ஒன்றிய துணை பெருந்தலைவர் ஹேமலதா மணிகண்டன், ஒன்றிய செயலாளர் முருகேசன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் லாரன்ஸ், தட்சிணா மூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஊராட்சி மன்ற தலைவர் வி.ராஜா வரவேற்று பேசினார்.

விழாவில் பணியை துவக்கி வைத்துவிட்டு பொதுமக்கள் மத்தியில் பேசிய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி கூறியதாவது:-

செட்டியபட்டி ஊராட்சியில் உள்ள இளையாழ்வார் நகர், கே.பி.டி.நகர், ராஜீவ்காந்தி நகர் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அப்பகுதியில் உள்ள மண்சாலைகள் தார்ச்சாலைகளாக மாற்றப்படும் என்றார். இப்பகுதி மக்கள் தேசிய நான்குவழிச்சாலையில் அடைக்கப்பட்டுள்ள பேரிக்கார்டுகளை அகற்ற வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். அப்பகுதியில் நவீன உயர்கோபுர விளக்குகள், சர்வீஸ்சாலைகள் அமைத்த பின்பு அடைக்கப்பட்டுள்ள பேரிக்கார்டுகள் அகற்றப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்படும் என்றார். இப்பகுதியில் ஒரு சிலர் தங்கள் பகுதிக்கு சிறு மின்விசை தண்ணீர் தொட்டி வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

உடனடியாக அவர்களுக்கு அந்த வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்றார். விரிவாக்க பகுதிகளில் சிறுவர்கள் மற்றும் பள்ளி மாணவர்கள் விளையாடும் வகையில் நவீன பூங்காக்கள் அமைத்து கொடுப்பதோடு இளைஞர்களை விளையாட்டு துறையில் ஊக்குவிக்க விளையாட்டு பயிற்சி மையங்கள் கிராமங்கள் தோறும் ஏற்படுத்தி கொடுக்கப்படும் என்றதோடு அதற்கான இடங்களையும் தேர்வு செய்து வருகிறோம் என்றார்.

நிகழ்ச்சியில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், சட்டமன்ற உறுப்பினர் முகாம் அலுவலக தாசில்தார் நவநீத கிருஷ்ணன், அலுவலர் வடிவேல் முருகன், ஒன்றிய தி.மு.க. துணை செயலாளர்கள் ஆலமரத்துப்பட்டி ராஜேந்திரன், எம்.சி.பாண்டியன், வசந்தா கென்னடி, பொருளாளர் லட்சுமணன், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைபட்டி வாஞ்சிநாதன், சின்னாளபட்டி பேரூராட்சி மன்ற தலைவர் பிரதீபா கனகராஜ், துணைத் தலைவர் ஆனந்தி பாரதி ராஜா, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் பத்மாவதி ராஜகணேஷ், சின்னாளபட்டி பேரூர்கழக செயலாளர் மோகன், முன்னாள் செயலாளர்கள் அறிவழகன், பாலகிருஷ்ணன், பேரூர் கழக பொருளாளர் எஸ்.ஆர்.முருகன்,

முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் கலிக்கம்பட்டி புவனேஸ்வரி அருளரசன், காந்திகிராமம் ஜெயராமன், ஒன்றிய குழு உறுப்பினர்கள் நாகவள்ளி, காணிக்கைசாமி, செட்டியபட்டி ஊராட்சியைச் சேர்ந்த கோமாளிசாமி மற்றும் செட்டியபட்டி ஊராட்சி மன்ற துணை தலைவர் பழனி, வார்டு உறுப்பினர்கள் ஜான்சி பொன்மலர், பொம்முத்தாய், நந்தினி, ரவி, ராஜேந்திரன், மாரியம்மாள், சின்னாளபட்டி தி.மு.க. இளைஞர் அணியைச் சேர்ந்த மணிமாறன், மெடிக்கல் கோபி, கேபிள்ராஜா, மற்றும் ஊர் பொதுமக்கள், கட்சி நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



செட்டியபட்டி ஊராட்சி ராஜீவ்காந்தி நகரில் தமிழ்நாடு முதலமைச்சர் சாலைகள் மேம்பாட்டு திட்டம் மூலம் ரூ.18.95 லட்சம் மதிப்பில் புதிய தார்ச்சாலை அமைக்கும் பணியினை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி துவக்கி வைத்தார். உடன் ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன், ஊராட்சி மன்றத் தலைவர் ராஜா உட்பட பலர் உள்ளனர்.